# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1920/27 - 2015 ජූනි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.06.25

*1920/27 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2003*

**2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கும், சீனக் குடியரசு அரசாங்கத்துக்கும் இடையே இரண்டாயிரத்துப் பதின்னான்காம் ஆண்டு செத்தெம்பர் மாதம் பதினாறாம் நாளன்று கொழும்பில் செய்யப்பட்ட உடன்படிக்கை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுநலவாய நாடொன்றல்லாத சீனக் குடியரசு அரசாங்கத்துக்கும் இடையே செய்யப்பட்ட இவ்வுடன்படிக்கை குற்றவியல் கருமங்களில் சட்ட ரீதியான பரஸ்பர உதவியைக் கையாள்கின்றது என்பதுடன், மற்றவற்றுக்கிடையில் தத்தமது நியாயாதிக்கங்களினுள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் உட்பட, குற்றச் செயல்களைத் தடுத்தல், புலனாய்வு செய்தல், குற்ற வழக்குகளைத் தொடுத்தல் மற்றும் நீதிமுறை வழக்கு நடவடிக்கைமுறைகள் என்பன தொடர்பாக ஒத்துழைப்பினூடாக உடன்படிக்கைக்கான இருதிறத்தவர்களினதும் மேம்பாடான பயனுறுதியுடன் சம்பந்தப்பட்டதாகும்.

விஜயதாச ராஜபக்ஷ,<br>நீதி அமைச்சர்.

கொழும்பு,<br>*2015, யூன் 10.*

*7 - 517*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*